பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 14 | செவ்வாய்க்கிழமை | 29.08.2023 | அதிர்வு 28

பாதசாரி கடவையில்

## வீதியைக் கடந்தவர் லொறி மோதி சாவு!

பாதசாரி கடவையில் வீதியைக் கடந்தவர் லொறி மோதி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தலவாக்கலை – நுவரெலியா வீதியில் நானுஓயா – ரதல்ல 03▶





# திருமலை மாவட்ட செயலகத்துக்குள் அத்துமீறிப் புகுந்து பிக்குகள் அடாவடி

## இடைநிறுத்தப்பட்ட விகாரையின் கட்டுமான வேலைகளை மீள ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கக் கோரிப் போராட்டம்

திருகோணமலை, ஓகஸ்ட் 29

திருகோணமலை மாவட்ட செயலகத்தைப் பௌத்த பிக்குகள் நேற்று முற்றுகையிட்டுப் போராடினர். அத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்த மண்டபத்துக்குள்ளும் புகுந்து களேபரத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் நிலாவெளி - பெரியகுளத்தில் இடைநிறுத்தப்பட்ட விகாரையின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 03▶

# இனவாதப் பிரசாரச் சூழ்ச்சியால் ஆட்சியை பிடிக்க மக்கள் ஒருபோதுமே அனுமதியார்!

## அடித்துக் கூறுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஓக. 29

இனவாதப் பிரசாரச் சூழ்ச்சியால் ஆட்சியைப் பிடிக்க நாட்டு மக்கள் ஒருபோதும் அனுமதி வழங்க மாட்டார்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இனவாதக் கருத்துக்களைக் கக்கி ஆட்சிப்பீடம் ஏற எத்தனிப்பவர்கள் கடந்த கால வரலாறுகளை மறக்கக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆட்சியை எந்தத் தரப்புக்கு வழங்குவதென நாட்டு மக்களே முடிவு செய்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டு மக்களை எவரும் முட்டாள்களாக்க முடியாது என்றும், அவர்கள் ஜனநாயகவாதிகளையும், 03▶



# பாதாளக் குழுக்களை ஒடுக்கியே தீருவோம்!

## அமைச்சர் டிரான் அலஸ் சபதம்

பொறுப்புள்ள அரசு என்ற வகையில், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் அரசு இடமளிக்காது என்றும், ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் நாட்டில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துவதற்குத் தேவையான 03▶





## இ பரகசியம்

சீனர்களுக்கு அதிகம் வெற்றிலை வைக்கும் கொழும்பு, அதன் விளைவுகளை எதிர்கொள்ளாமல் இல்லை. உதாரணத்துக்கு இப்போது நடந்துள்ள ஒரு சம்பவம் பற்றிய தகவலைத் தருகிறேன்.

கொழும்புத் துறைமுக நகரில் வர்த்தகத் 03▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

## அதிகாலை வேளையில் கத்தியைக் காட்டி

# யாழ்ப்பாணத்தில் கைவரிசை காட்டி வந்த நகைக் கொள்ளையர் குழு மடக்கப்பட்டது



– எஸ்.நிதர்ஷன் –

யாழ் மாவட்டத்தில் இரவில் கத்தியைக் காட்டி மிரட்டி நகைகளைக் கொள்ளை அடித்து வந்த கும்பல் யாழ் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவால் மடக்கிப் பிடிக்கப்பட்டதோடு கொள்ளையிடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் வீடுகளுக்குள் இரவு வேளைகளில் கூரையைப் பிரித்து இறங்கி, வீட்டில் உள்ளவர்களை அச்சுறுத்தி, கத்தியைக் காட்டி நகைகளைக் கொள்ளை அடித்துச் செல்லும் சம்பவங்கள் கடந்த வாரங்களில் இடம்பெற்றிருந்தன. இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் ஐந்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

யாழ். மாவட்டப் பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் வழிகாட்டுதலின் கீழ், யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் தெ.மேனன் தலைமையிலான அணியினரால் இந்தத் திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய – நல்லூர் பின் வீதியைச் சேர்ந்த – நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டமையோடு கொள்ளையிடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சங்கிலியன் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை அரச உத்தியோகத்தரின் வீட்டுக்குள் புகுந்து கத்தியைக் காட்டி மிரட்டியமை, கல்வியங்காட்டுப் பகுதியில் கிறிஸ்தவ மதகுரு ஒருவரைக் கத்தியைக் காட்டி மிரட்டிப் பணம் கொள்ளை அடித்தமை மற்றும் பாற்பண்ணை பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்து கத்தியைக் காட்டி மிரட்டி நகைகளைக் கொள்ளை அடிக்க முயன்றமை, இணுவில் பகுதியில் வயோதிபர்கள் இருந்த வீட்டுக்குள் புகுந்து கத்தி காட்டி நகைகளைக் கொள்ளை அடித்தமை போன்ற போன்ற குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்களே கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சங்கிலியன் வீதி பகுதியில் கொள்ளையடிக்கப்பட்ட 24 பவுண் நகையும், இணுவில் பகுதியில் கொள்ளையடிக்கப்பட்ட நான்கு பவுண் நகையும், கொள்ளைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிள், வாள், நான்கு கையடக்க தொலைபேசிகள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது நல்லூர்பின்வீதியால்செல்லும்வயது முதிர்ந்தவர்களை மிரட்டி கைத்தொலைபேசி, சிறிய தொகை பணம் கொள்ளையிட்ட சம்பவத்திலும் அவர்கள் ஈடுபட்டுள்ளமை ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

யாழ்மாவட்டபிரதிப.பொலிஸ்மாஅதிபர் மஞ்சுள செனரத்தின் ஆலோசனைக் கமைய யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜகத் விஷாந்தவின் கீழ் இயங்கும் யாழ். மாவட்ட குற்றதடுப்பு பிரிவு உத்தியோகத்தர்களுக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜெரோலால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கமைய யாழ்மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் தெ.மேனன் மற்றும் சப் இன்ஸ்பெக்டர் பிரதீப்பின் கீழ் கவியரசன் ஜெயந்தன், கரன், சுஜந்தன், ஜோசப், சம்பத் அறுகம், பெண் கான்ஸ்டபிள் இரந்திகா ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினர் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

# இனவாத நாடகத்தால் ஆட்சியைப் பிடிக்க முயல்வோருக்குப் பாடம் புகட்டுவர் மக்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விளாசல்

“ஆட்சியைப் பிடிப்பதற்காக 2019 இல் அரங்கேற்றிய இனவாத நாடகத்தின் இரண்டாவது பாகத்தைத் தற்போது அரங்கேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறானவர்களுக்கு மக்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

“13 என்கின்றனர், 13 பிளஸ் என்கின்றனர். இவை யாவும் போலியான வாக்குறுதிகளாகவே உள்ளன. ஜனாதிபதி கனவில் உள்ள சிலர், தமது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ளவும், சுகபோக வாழ்வுக்காகவும் மக்களை ஏமாற்றுவதற்கு முற்படுகின்றனர்.



2019 இல் மக்களை எவ்வாறு ஏமாற்றி ஆட்சியைப் பிடித்தார்களோ அதன் இரண்டாவது பாகத்தை அரங்கேற்றி வருகின்றனர். இனவாத ரீதியிலான பிரசாரங்கள் இதன் ஓர் அங்கமாகும்.

இனவாதம், மதவாதம் பரப்பி ஆட்சியைப் பிடித்தவர்களை மக்கள் விரட்டியடித்தனர் என்பதை நினைவில் வைத்துச் செயற்பட்டால் சிறந்தது.” – என்றார் .

தேவை
கல்வி சம்பந்தமான
You tube chanel இற்கு
ஆங்கிலப் பேச்சுத் திறமையுள்ள
presenter தேவை.
ஆங்கிலத்தில் சரளமாக
உரையாற்றவும் எழுதவும்
கூடியவர்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும்.
0752604360

Required
Need someone who can host Quiz in English Medium on Stage for AL students.
Please contact:-
0752604360

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

தில் ஈடுபட்டிருப்பவர் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ஒரு சீனர் அண்மையில் பொரளைப் பொலிஸில் முறைப்பாடு ஒன்றைச் செய்தார்.

பொரளை லேக் டிரைவில் உள்ள தங்கள் வீட்டைக் கொள்ளையிட்ட ஓர் ஆயுத குழு, தன்னையும் தனது மொழிபெயர்ப்பாளரையும் தாக்கிக் கட்டிப் போட்டு விட்டு, தமது சமையல்காரரைச் சமையலறையில் கட்டி வைத்து விட்டு, நான்கு கோடி ரூபா மதிப்புள்ள வெளிநாட்டுப் பண நோட்டுகள் மற்றும் பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்று விட்டது என்றார் அவர்.

தங்களின் நண்பர்கள் பின்னர் வந்து தங்களைக் காப்பாற்றி மீட்டனர் என்றும் அவர் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி இந்தக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றதாக அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க டொலர், சீன யுவான், தாய்லாந்து பாட், ஹொங்கொங் டொலர், திராம் மற்றும் இலங்கை ரூபா என இரண்டு கோடி 38 லட்சம் ரூபா பெறுமதியான நோட்டுகள், பதினொரு மொபைல் போன்கள், ஏழு மடிக்கணினிகள், ஐந்து வெளிநாட்டு சாராயப் போத்தல்கள், அமெரிக்கத் தயாரிப்புக் கை கடிகாரம், மொழிபெயர்ப்பாளின் வாகனம் என்று நீண்ட பட்டியல் கொள்ளை போனதாகக் கூறப்பட்டது.

ஆனால் விடயத்துக்குள் புகுந்து விளையாடிய குற்றப்புலனாய்வு பொலிஸார் உண்மையைக் கண்டுபிடித்தனர்.

மேற்படி சீனரும் அவரது கூட்டாளிகளான பதினைந்து சீன நண்பர்களும் சேர்ந்து அரங்கேற்றிய நாடகமே இந்தக் கொள்ளைச் சம்பவம் என்ற உண்மை அம்பலத்துக்கு வந்துள்ளது.

சூதாட்டத்தில் தான் பணத்தைத் தொலைத்தமையை மூடி மறைப்பதற்காகவே இந்த நாடகத்தை அவர் அரங்கேற்றி இருக்கின்றார்.

இலங்கையில் தடை செய்யப்பட்ட பிரமிட் மோசடி வர்த்தகத்தை இந்த சீனர் வேறு சில சீன நண்பர்களை தமது வீட்டில் வேலைக்கு அமர்த்தி, அங்கிருந்தபடி சர்வதேச ரீதியில் இணையம் மூலம் நடத்தி வந்திருக்கிறார்.

இந்தப் பிரமிட் வர்த்தகத்தில் பணிபுரிந்த 15 சீனர்கள், அதற்கு பயன்படுத்தப்பட்ட சுமார் 40 மடிக்கணினிகளுடன் அந்த வீட்டிலிருந்து கம்பி நீட்டி விட்டனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தக் குழு ஒரு வருடத்துக்கு மேல் இங்கே தங்கி இருந்து இந்த சூதாட்ட வர்த்தகத்தை நடத்தி வந்திருக்கின்றது.

அத்தோடு பிரதான நபர் கொழும்புத் துறைமுக நகர வர்த்தகர் என்ற தகவலும் பொய் என்பது அம்பலமாகி உள்ளது.

அந்த நபரின் இல்லத்தில் இருந்து 30 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்களும் பிடிபட்டுள்ளன. தடை செய்யப்பட்ட சிகரெட் வர்த்தகத்திலும் அவர் ஈடுபட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் பிரதான சந்தேக நபர் கொழும்பில் உயர் விலை உள்ள சொகுசு தொடர் மாடிகளில் ஏழு வீடுகளை வாங்கி இருக்கிறார் என்பதும் தெரிய வந்திருக்கின்றது.

சீனர்களை அரவணைக்கும் கொழும்பின் தாராளம், அவர்களின் கிரிமினல் நடவடிக்கைகளுக்கான தளமாக இலங்கையை மாற்றி வருவதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

## திருமலை மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விகாரை நிர்மாணத்துக்கு அனுமதி வழங்குமாறு கோரி திருகோணமலை மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டுப் பிக்குகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் திடீரென மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்த மண்டபத்துக்குள் புகுந்து, கூட்டத்தின் நடுவே அமர்ந்து "குந்து மறியல்" பாணியில் தர்ணா செய்தனர். சத்தமிட்டு களேபரம் பண்ணினர். குழப்பத்தை ஏற்படுத்தினர். இவர்கள் ஏற்படுத்திய குழப்பத்தால் கூட்டம் தடைப்பட்டது.

இதையடுத்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஏனைய சில அதிகாரிகளுடன் சேர்ந்து அந்தப் பிக்குகளை அழைத்து, தனியாகக் கூட்டம் நடத்தினார்.

விகாரை நிர்மாணத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக விளக்கம் வழங்கினார். ஆனால், அவர்கள் அதனை ஏற்கவில்லை.

இதன்போது, "திருகோணமலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு பிரதேசம். பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால், அதற்கு நீங்களே முன்னுதாரணமாக இருப்பீர்கள்" – என்று ஆளுநர் கூறினார்.

எனினும் இந்தக்கூட்டத்தில் முன்னைய கடிதம் ஒன்றை வாபஸ் பெற ஆளுநர் இணங்கினார் – இறங்கி வந்தார் – என சில வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட ஆளுநர்,

"பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதியின்றி எந்தவொரு கட்டுமானப் பணிகளும் முன்னெடுக்க முடியாது." – என்றார்.

## இனவாதப் பிரசாரச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இனவாதிகளையும் அடையாளம் கண்டுவிட்டார்கள் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

## பாதாளக் குழுக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களம் தற்போது அரசியல் தலையீடற்ற நிறுவனமாக இயங்குகின்றது என்றும், நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்குப் பொலிஸ் திணைக்களம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"பொலிஸ் அதிகாரிகளின் நியமனங்களின்போது, அரசியல் தலையீடுகள் இடம்பெறுவது தடுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த பொலிஸாரின் நலன்புரிச் சேவைகள் பலவற்றைத் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

தற்போது இணையவழி ஊடாக கடவுச்சீட்டுகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு செயற்திறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்கில் குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்தில் செயற்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களை நவீனமயப்படுத்த அவசியமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றி அதிகம் பேசப்படுகின்றது. இது தவிர இந்நாட்டில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில், பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இனிமேலும் செயற்பட முடியாது. இந்நாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

தற்போது பாதாள உலகக் குழுக்களுக்கிடையில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. அவர்கள் தங்களுக்குள்ளேயே மோதிக்கொள்கின்றன. குறிப்பாக போதைப்பொருள் தொடர்பாக இடம்பெறும் மோதல்களே இவ்வாறு அவர்கள் குழுக்களாகப் பிரிந்து தாக்குதல்களில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைகின்றது.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும் செய்ய எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையை கத்தோலிக்க திருச்சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான பொலிஸ் விசாரணைகளுக்குக் கத்தோலிக்க திருச்சபையும் ஒத்துழைப்பு வழங்க முடியும்." – என்றார்.

## வீதியைக் கடந்தவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது என்று நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

ரதெல்ல, சர்செட் தோட்டத்தின் லாண்டேல் பிரிவில் வசித்து வந்த ராஜ் கிருஷ்ணகுமார் (வயது – 33) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

வேலைக்குச் செல்வதற்காக அவசர அவசரமாகப் பாதசாரிக் கடவையில் கடந்த அவரை, அதிவேகமாக வந்த லொறி மோதித் தள்ளியுள்ளது. படுகாயமடைந்த நிலையில், அதே லொறியில் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ள நானுஓயா பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூரான் 8ஆம் நாள் உற்சவ வீதியுலா

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவி எட்டாம் நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி, தெய்வானை சமதேராக, முருகப்பெருமான் மகர வாகனத்தில் வீதியுலா வந்தார்.

படங்கள் :– பிரபாகன் டிலக்சன்















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இணைவின் முக்கியம்

எதிரணியில் இருக்கும் இரண்டு முக்கிய தலைவர்கள் ஏறத்தாழ ஒரே விடயத்தைச் சுட்டிக் காட்டி இருக்கின்றனர். தென்னிலங்கை அரசியலின் செல்நெறி - போக்கு - குறித்து அவர்கள் விசனத்துடன் கூறும் கருத்துகள் அவை.

ஒருவர் - எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸா.

"ஆட்சியைப் பிடிப்பதற்காக 2019 இல் அரங்கேற்றிய இனவாத நாடகத்தின் இரண்டாவது பாகத்தைத் தற்போது அரங்கேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. அப்போது இனவாதம், மதவாதம் பரப்பி ஆட்சியைப் பிடித்தவர்களை பின்னர் மக்கள் விரட்டியடித்தனர் என்பதை நினைவில் வைத்துச் செயற்பட்டால் சிறந்தது. இவ்வாறானவர்களுக்கு மக்கள் இம்முறையும் தக்க பாடம் புகட்ட வேண்டும்." - என்று சுட்டிக் காட்டியுள்ளார் சஜித் பிரேமதாஸா.

மற்றவர் - தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பியின்) தலைவர் அநுரகுமார திஸநாயக்க.

"மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து, பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் ஆட்சியைத் தக்கவைப்பதற்கும், பிடிப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. குருந்தூர்மலை விவகாரம், கஜேந்திரகுமார் எம்.பியின் வீடு சுற்றிவளைப்பு என்பன இவற்றின் அங்கங்களாகும். இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் மக்கள் சிக்கக்கூடாது." - என்று அவர் கூறியிருக்கின்றார்

தென்னிலங்கையில் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்குக் காலம் காலமாகக் கட்டவிழும் வழமையான பண்பியல்பு இப்போதும் அரங்கேறி வருவதை இருவரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இனவாதத்தைக் கிளப்புவதன் மூலம் பேரினவாத வெறியைத் தூண்டி, இன - மத வாதத் தீயை எரிய விடுவதன் வாயிலாக, பெரும்பான்மையின மக்களின் வாக்குகளை இலகுவாகச் சுருட்டி அரசியல் செய்யலாம் என்ற காலாதிகால சிந்தனைதான் இப்போதும் தெற்கில் வெளிப்படுகின்றது.

மகாவம்ச மனவமைப்பில் சிக்கிக் கிடக்கும் பௌத்த - சிங்கள மக்கள் மத்தியில் இலகுவாக இனவாதத் தீயைத் தூண்டி விட முடியும் என்பதை உணர்ந்து, அந்த அடிப்படையில் இந்த மூன்றாந்தரச் செயலைத் தெற்கு அரசியல்வாதிகள் தாராளமாக முன்னெடுக்கின்றனர்.

இந்த இனவாதத் தீயின் ஆபத்துக் குறித்து, அபாயமணியை ஒலித்து, எச்சரிக்கைச் சங்கை ஊதும் சஜித், அநுரகுமார போன்ற தலைவர்கள், அரசியல் ரீதியில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட முகாம்களில் இருந்தாலும், அவர்கள் எச்சரிக்கும் அந்த இனவாதத்தை வேரோடு களைவதற்காக வேனும், அரசியல் அரங்கில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது ஒன்றித்துச் செயற்பட முன்வர வேண்டும்.

இனவாதம் பரப்புவோர் குறித்து வெறும் எச்சரிக்கைப் பேச்சு மட்டும் மக்களுக்குச் சரியான வழிகாட்டலாகி விடாது என்பதையும், அதையும் தாண்டி ஒன்றித்து சில பணிகளை - அரசியல் நகர்வுகளை - செய்வது காலத்தின் கட்டாயம் என்பதையும் அவர்கள் உணர்ந்தால் நல்லது.

# ரயிலில் மோதி யுவதி மரணம்

மருதானையில் இருந்து அளுத்கம நோக்கி பயணித்த ரயிலில் மோதி படுகாயமடைந்த யுவதியொருவர் பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இரவு 7.00 மணியளவில் மருதானையில் இருந்து அளுத்கம நோக்கி பயணித்த ரயில் பாணந்துறை நிலையத்திலிருந்து பின்வத்தை நோக்கி பயணித்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கையடக்கத் தொலைபேசியை காதில் வைத்துக் கொண்டு ரயில் பாதையில் பயணித்த 22 வயதுடைய யுவதியே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த யுவதி இதுவரை அடையாளம் காணப்படவில்லை என ரயில்வே அதிகாரி தெரிவித்துள்ளார்.

கறுப்பு நிற காற்சட்டை மற்றும் மஞ்சள் நிற மேலாடை அணிந்திருந்த யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த யுவதி வாதுவ ரயில் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து 1990 அவசர சேவையினூடாக பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் என வாதுவ ரயில் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# சந்நிதி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்த அடியவர் மரணம்!

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்று அங்கப் பிரதிஷ்டை செய்த அடியவர் திடீரென சுகவீனமுற்ற நிலையில் சாவடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னையா சுரேஷ்குமார் (வயது 57) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழப்புக்கான காரணம் உடற்கூற்றுப் பரிசோதனைக்குப் பின்பே தெரியவரும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு மரணம்

மாத்தறை மாவட்ட நீதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் ரி - 56 ரக துப்பாக்கியால் மார்பில் சுடப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெனதுறை, தல்பாவில - மெத பொல தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பந்துல புஷ்பகுமார என்பவரே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது மார்பில் இரண்டு முறை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் சந்தேகத்துக்கிடமான துப்பாக்கி காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பிரித்தாளும் சூழ்ச்சிகள் ஊடாக ஆட்சியைத் தக்கவைக்க முயற்சி

## - அநுர பகிரங்க எச்சரிக்கை



"மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் ஆட்சியைத் தக்கவைப்பதற்கும், பிடிப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. குருந்தூர்மலை விவகாரம், கஜேந்திர குமார் எம்.பியின் வீடு சுற்றிவளைப்பு என்பன இவற்றின் அங்கங்களாகும். இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் மக்கள் சிக்கக்கூடாது."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பொரளை தொகுதிக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"2005 இல் ரணிலும், மஹிந்தவும் அரசியல் எதிரிகள் என்றனர். 2010 இலும் இருவருக்கிடையிலும் போட்டி என்றனர். 2015 இலும் இரு அணிகளாகவே



போட்டியிட்டனர். 2019 இல் இரு அணிகளில் இருந்தனர். ஆனால், 2023 இல் இணைந்து ஆட்சி அமைந்துள்ளனர். இதுதான் இவர்களுக்கிடையிலான அரசியல் டீல். பிளவுபட்டிருப்பதுபோல் காட்டிக்கொள்வார்கள், எனினும், உள்ளுக்குள் இணக்கம் இருக்கும்.

2005 இல் போரை முடிப்பது யார் என்றும், 2010 இல் போரை முடித்தது யார் என்றும் பிரசாரம் இடம்பெற்றது. 2015 ஜனாதிபதித் தேர்தலில் சர்வாதிகாரமா, ஜனநாயகமா எனப் பிரசாரம் இடம்பெற்றது. 2019 இல் தேசிய பாதுகாப்பு பற்றி பேசப்பட்டது. இதன்மூலம் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளும் மூடிமறைக்கப்பட்டன.

மக்கள் இன்று உண்மையை உணர்ந்துள்ளனர். நாட்டில் இரு பிரதான முகாம்கள்தான் உள்ளன. ஒன்று தேசிய மக்கள் சக்தி, அது மக்கள் ஆட்சிக்கான சக்தி. மற்றைய முகாம் ஊழல், மோசடிகளில் ஈடுபடும் அணி. எனவே, தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைந்தால்தான் நாடு முன்னேறும்.

இன்று இனவாதத்தைத் தூண்டுகின்றனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியின் வீடு சுற்றிவளைக்கப்படுகின்றது. குருந்தூர்மலை பிரச்சினை வருகின்றது. இவற்றைத் தோற்கடிக்க வேண்டும். அனைத்து இன மக்களும் சம உரிமை அனுபவிக்கும் வகையில் அமைதியான நாட்டை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பு." – என்றார்.

# 'சிம்பாவை' பார்வையிட மக்களுக்கு வாய்ப்பு!





"சிம்பா" என பெயரிடப்பட்டுள்ள, சிங்கக்குட்டியை தற்போது தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் பொதுமக்கள் காணலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிங்கக்குட்டிக்கு தெஹிவளை மிருகக்காட்சிசாலை கால்நடை பணிப்பாளர்களால் "சிம்பா" என பெயரிடப்பட்டு வளர்க்கப்படுகின்றது என தேசிய விலங்கியல் பூங்கா திணைக்கள பணிப்பாளர் கலாநிதி திலக் ப்ரேமகாந்த தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் சண்டி மற்றும் மீரா என்ற சிங்கங்களுக்கு பிறந்த சிம்பா, தற்போது ஐந்து வாரங்கள் நிறைவடைந்துள்ளது.

பிரசவத்தின் பின் தாயால் சிம்பா நிராகரிக்கப்பட்டதையடுத்து பராமரிப்புக்காக சிம்பா தெஹிவளை பூங்காவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போது கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பாளர்கள் கண்காணிப்பின் கீழ் வளர்ந்து வரும் சிம்பா மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com



# தண்ணிமுறிப்புக் கிராமத்தில் மீள்குடியேற்றப்படும் வரையில் தொடர்ந்து போராடுவோம்!

## ரவிகரன் சூளுரை

– விஜயரத்தினம் சரவணன் –




தமிழர்களின் பூர்வீகக் கிராமமான தண்ணிமுறிப்பில், எமது தமிழ் மக்கள் மீளக்குடியமர்த்தப்படும் வரை நாம் தொடர்ந்து மக்களோடு இணைந்து போராடுவோம் என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு – தண்ணிமுறிப்புப் பகுதியில், தொல்லியல் மற்றும் வனவளத் திணைக்களத்தால் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் ஆராய்வதற்கு அரசஅதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், காணிகளுக்குரிய பொதுமக்கள் ஆகியோர் இணைந்து அந்தப் பகுதிக்கு களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டனர்.

அந்தக் களவிஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

தண்ணிமுறிப்புப் பகுதியில் வாழ்ந்த தமிழ்மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு, தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

தற்போது 2023ஆம் ஆண்டு ஆகிவிட்டபோதும் அந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

இந் நிலையில் அந்த மக்கள் தமது காணிகளைத் தாமே துப்பரவு செய்து, விவசாய நடடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சியை முன்னெடுத்தவ்போது, தொல்லியல் திணைக்களத்தாலும், வனவளத் திணைக்களத்தாலும் அதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வாறிருக்க தமது பூர்வீக விவசாய மற்றும் குடியிருப்புக் காணிகளை மீட்க இந்தமக்களும், இந்த மக்களோடு, மக்கள் பிரதிநிதிகளான நாமும் தொடர்ந்து போராடி வருகிறோம்.

அந்த வகையில் இம்மாதம் 18 ஆம் திகதி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடலில் இந்தக் காணி விடுவிப்பு தொடர்பாலே பேசப்பட்டது. அதற்கமைய நேரடியாகக் களவிஜயம் மேற்கொண்டு இங்குள்ள நிலைவரங்களைப் பார்வையிடுவதென முடிவு செய்யப்பட்டது.

அதற்கமைய தண்ணிமுறிப்புப் பகுதிக்கு வருகை தந்து இந்த ஆக்கிரமிப்பிற்குள்ளான தமிழ் மக்களின் காணி விடயம் தொடர்பான நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்டு சிலமுடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படயில் சில பகுதிகள் விடுவிப்பதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதுடன், சில பகுதிகளை தற்போது விடுவிப்பதற்கு முடியாத சூழல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே விடுவிக்கப்பட முடியாத காணிகள் தொடர்பில் மாவட்டசெயலர் உரிய தரப்பினருக்கு எழுத்துமூலமாக அறிக்கை சமர்ப்பித்து அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அந்த வகையில் இந்தக் காணி விடுவிப்புத் தொடர்பிலான எமது மக்களதும், மக்கள் பிரதிநிதிகளான எங்களதும் தொடர் வலியுறுத்தலுக்கு கிடைத்த ஒரு முன்னேற்றமாக இதைப் பார்க்கின்றோம்.

இந்த மக்களின் காணிகள் அவர்களுக்குக் கிடைக்கும் வரை நாம் தொடர்ச்சியாக மக்களோடு துணை நிற்போம் – என்றார்.

# பரீட்சை மதிப்பீட்டு பணியில் ஈடுபட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு விடுமுறை

கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இரண்டு நாள்கள் கடமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நேற்றும் இன்றும் இவ்வாறு கடமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 18 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கம்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு விதிக்கப்பட்ட தடையை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் நீக்கியுள்ளது.

தடை நீக்கப்பட்டமை தொடர்பான அறிக்கையை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் வெளியிட்டுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாகம் தொடர்பாக கடந்த ஜூலை 24 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விடயங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்காலத்தில் இலங்கை உதைபந்தாட்ட அணிக்கு சர்வதேச போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பு கிட்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

# மண் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருமலை வெருகலில் ஆர்ப்பாட்டம்!








திருகோணமலையில் வெருகல் நாதனோடை பகுதியில் மண் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுத் திங்கட்கிழமை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனையடுத்து மணல் அகழ்வு நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

வெருகல் நாதனோடை பகுதியில் மண் அகழ்வதற்காக தனியார் ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட்டதையடுத்து, நேற்று மண் அகழ்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெருகல் பிரதேசத்தின் 10 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் மக்கள் மணல் ஏற்றுவதற்காக செல்லும் வழியை மறித்து அப்பகுதியில் மண் அகழ்வதினால் வெருகல் ஆற்றின் அணைக்கட்டு பாதிக்கப்படும் எனவும் இதன்மூலம் அணைக்கட்டு உடைக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் கூறி அப்பகுதியில் மணல் அகழ்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெருகல் – நாதனோடை அணைக்கட்டைஅந்தத் தனிநபர் இலவசமாகக் கட்டிக் கொடுத்திருந்தார் என்றதன் அடிப்படையில் இந்த மண் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்த அணைக்கட்டு காலாகாலமாக உடைப்பெடுத்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுவந்த நிலையில் அணைக்கட்டை தனிநபர் ஒருவர் இலவசமாகப் புனரமைத்துத் தருவதற்கு முன் வந்திருந்தார்.

அந்த வகையில், அணையைக் கட்டித் தந்தால்அந்தப் பகுதியில் இருக்கின்ற மண்ணை அகழ்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் அவருக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அப்பகுதியில் மண் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இருப்பினும்,அந்த அணைக்கட்டு கட்டியதற்குப் பதிலாக அவரால் ஏற்கனவே போதியளவான மண் அகழப்பட்டுள்ளதாகவும்,அந்தப் பகுதியில் மீண்டும் ஆழமாக மண்ணை அகழ்ந்தால் அது அணைக்கட்டை பாதிக்கும் என்பதால் அதற்கு அனுமதிக்க முடியாது எனவும், ஆற்றினுள் அள்ளக்கூடிய நிலையில் உள்ள மண்ணை ஆய்வுக்கு உட்படுத்திய பின்னர் அகழ முடியும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# வவுனியாவில் எட்டு வயதுச் சிறுவன் மீது துஷ்பிரயோகம்; 15 வயது சிறுவன் கைது

வவுனியாவில் 8 வயதுச் சிறுவன் ஒருவனைத் துஷ்பிரயோகம் செய்ததாக 15 வயது சிறுவன் வவுனியாப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளான்.

பாடசாலை முடிவடைந்து மேலதிக வகுப்புக்காக வவுனியா, வெளிக்குளம் பகுதிக்கு சென்ற 8 வயது சிறுவன் ஒருவனை அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் மாலை 15 வயது சிறுவன் ஒருவன் துஷ்பிரயோகம் செய்துள்ளான் என்று கூறப்படுகின்றது

இதன் பின், 8 வயது சிறுவன் வீடு சென்று தனக்கு நடந்த சம்பவத்தை வீட்டிற்கு தெரியப்படுத்தியமை அடுத்து, அந்தச் சிறுவன் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளான். இது தொடர்பில் வைத்தியசாலைப் பொலிஸாருக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து 15 வயது சிறுவன் வவுனியா பொலிசாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டான். மேலதிக விசாரணைகளின் பின் அசனை நீதிமன்றில் முற்படுத்த வவுனியா பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.



## தண்ணிமுறிப்பில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள

# தமிழர்களின் பூர்வீகக் காணிகளை விடுவிப்பது தொடர்பில் கள ஆய்வு











முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்பு – குருந்தூர்மலையை அண்டியுள்ள தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகளையும், குடியிருப்புக் காணிகளையும் வனவளத் திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பன ஆக்கிரமித்துள்ள நிலையில் அந்தக் காணிகளை விடுவிப்பது தொடர்பில் தண்ணிமுறிப்புப் பகுதிக்கு நேற்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தண்ணிமுறிப்பு பகுதியில் தம்மை மீள்குடியேற்றுமாறும், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விவசாயக் காணிகளை விடுவிக்குமாறும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். அந்தவகையில் மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், காணிகளுக்குரிய பொது மக்கள் ஆகியோர் இணைந்து தண்ணிமுறிப்புப் பகுதிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டு காணிப் பிணக்குத் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இருப்பினும் இந்தக் கள ஆய்வில் தமக்குத் திருப்தி இல்லை எனவும், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது பூர்வீக விவசாயக் காணிகள் விடுவிக்கப்படுவதுடன், தண்ணிமுறிப்பில்1984ஆம் ஆண்டுக்கு முன்னர் தாம் வாழ்ந்த பகுதிகளில் விரைவாகக் குடியமர்த்தப்படவேண்டும் எனவும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் வலியுறுத்தினர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

முல்லைத்தீவு – தண்ணிமுறிப்புப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள், கடந்த 1984ஆம் ஆண்டு அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது வாழ்விடங்களிலிருந்து வெளியேறியிருந்தனர்.

இவ்வாறு இடப்பெயர்வைச் சந்தித்த தமிழ் மக்கள் இதுவரையில் அவர்களது பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

இருப்பினும் அந்தத் தமிழ் மக்கள் தண்ணிமுறிப்பு பகுதியிலுள்ள தமது விவசாய நிலங்களில் நெல் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டு குருந்தூர்மலையை அண்டிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளை முற்றாக ஆக்கிரமித்தும், விவசாய நிலங்களை ஊடறுத்தும் தொல்லியல் திணைக்களம் எல்லைக்கற்களை நாட்டியிருந்தது.

இருப்பினும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் கடந்த 2021இல், பெரும்போக நெல் பயிர்ச்செய்கைக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டனர்.

இவ்வாறு தமிழ் விவசாயிகள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களத்தினர், பௌத்த தேரர்கள் சிலரும் இணைந்து விவசாய நடவடிக்கைகளுக்குத் தடை விதித்தனர்.

அத்தோடு வனவளத் திணைக்களத்தினர் அங்கு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததுடன், தற்போதும் அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தம்மைத் தமது பகுதிகளில் மீளக்குடியமர்த்துமாறும், தமது விவசாய நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்குமாறும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறான சூழலில் முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தில் கடந்த 18 ஆம் திகதி அன்று இடம்பெற்ற காணிப் பிணக்குகளைத் தீர்ப்பது தொடர்பிலான கலந்துரையாடலில் இந்தக் காணிப் பிணக்குத் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அந்தவகையில் குறித்த காணிப் பிணக்குத் தொடர்பில் உரிய திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் காணிகளுக்குரிய பொதுமக்கள் ஆகியோர் அந்தப் பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டு அதன் பின்னர் இந்தக் காணிப் பிணக்குகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்க முடிவு செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைவாக நேற்று இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் உள்ளிட்ட மாவட்ட செயலக அதிகாரிகள், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், வனவளத் திணைக்கள அதிகாரிகள், காணிக்குரிய பொதுமக்கள் ஆகியோர் தண்ணிமுறிப்புப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டுக் காணிப் பிணக்குத் தொடர்பில் ஆராய்ந்தனர்.

அந்தவகையில் தண்ணிமுறிப்புப் பகுதியில் தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் உரிய அமைச்சுக்களுடனும், பணிப்பாளர்களுடனும் பேசப்பட்டது.

அதேவேளை தொல்லியல் திணைக்கள எல்லைக்கற்களுக்கு வெளியே விவசாய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டதுடன், தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் மற்றும் உரிய அமைச்சுக்களுடனும், அதிகாரிகளுடனும் கலந்துரையாடிய பின்பே முடிவு எட்டப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தநிலையில் தமது விவசாயக் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படுவதுடன், தாம் தமது பகுதிகளில் விரைவில் மீளக்குடியேற்றப்பட வேண்டும் எனவும் காணிகளுக்குரிய பொதுமக்கள் வலியுறுத்தினர்.

# நீட் பயிற்சி மாணவர்கள் இருவர் தற்கொலை: இந்த ஆண்டில் மாத்திரம் 24 பேர் உயிரிழப்பு

ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நீட் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இரு மாணவர்கள் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டில் மாத்திரம் கோட்டாவில் இடம்பெற்ற மாணவர்களின் தற்கொலைகளின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.

அவீஷ்கர் பயிற்சி மையத்தின் 6 ஆவது மாடியில் இருந்து குதித்து மாணவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். குறித்த மாணவர் பயிற்சி மையத்தில் ஒரு தேர்வை எழுதிய பின்னர் அவீஷ்கர் மாடியில் இருந்து கீழே குதித்துள்ளார்.

உடனடியாக பயிற்சி மைய ஊழி



யர்கள் அந்த மாணவரை மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் மருத்துவமனை செல்லும் வழியிலேயே மாணவரின் உயிர் பிரிந்தது.

அத்துடன், சில மணி நேரங்களுக்குப் பின்னர் பிஹாரைச் சேர்ந்த மாணவர் ஒருவரும் தற்கொலை செய்து கொண்டார். அவர் வாடகை வீட்டில் வசித்துவந்துள்ளார். அந்த வீட்டின் அறையில் உள்ள மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரும் பயிற்சி மையத்தில் தேர்வெழுதித் திரும்பியுள்ளார். பின்னர் மாலை 7 மணியளவில் அவர் தற்கொலை செய்து கொண்டார். இரண்டு மாணவர்களும் தமது தற்கொலைக் குறிப்பு ஏதும் எழுதிவைக்கவில்லை.

இதேவேளை, கோட்டாவில் உள்ள நீட் பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு தொடங்கியதிலிருந்து இதுவரை 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

கோட்டா நகரில் உள்ள பல்வேறு பயிற்சி மையங்களிலும் 3 லட்சம் மாணவர்கள் நீட், உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கும் பயிற்சி பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீமான் மீது சென்னை பொலிஸ் ஆணையரிடம் முறைப்பாடு செய்தார் நடிகை விஜயலட்சுமி!



தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றிய விவகாரத்தில், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை கைது செய்யக் கோரி சென்னை பொலிஸ் ஆணையரிடம் நடிகை விஜயலட்சுமி புகார் அளித்துள்ளார்.

சென்னை பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் நேற்று பொலிஸ் ஆணையரிடம் நடிகை விஜயலட்சுமி புகார் மனு ஒன்றை அளித்தார். இதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், 2011 ஆம் ஆண்டு சீமான் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் பேரில் பிரிவு 420 இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கின் மேல் நடவடிக்கைக்காக நான் முயற்சித்தேன்.

அப்போது நாம் தமிழர் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவரான மறைந்த தடா சந்திரசேகர் மூலம் சீமான் ஒரு பேச்சுவார்த்தை நடத்தினார். அந்தப் பேச்சுவார்த்தையின்போது, என்னை ஊர் அறிய திருமணம் செய்துகொண்டு மனைவியாகவும், கயல்விழியை துணைவியாகவும் கொண்டு வாழ்கிறேன் என்று கூறியிருந்தார்.

அதை நம்பி, அந்த வழக்கில் மேல் நடவடிக்கை வேண்டாம் என்று எழுதிக் கொடுத்திருந்தேன். வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்றெல்லாம் எழுதி கொடுக்கவில்லை. ஆனால் சீமான் அவ்வாறு செய்யவில்லை.

எனவே, பொலிஸ் ஆணையரகத்தில் இன்று இது தொடர்பாக புகார் அளித்திருக்கிறேன். 2011 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசராணை செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளேன். அதேபோல், தற்கொலை முயற்சி வழக்கு, இது தவிர புதிதாக புகார் ஒன்றையும் கொடுத்துள்ளேன்.

என்னுடைய புகாரின் மீது தற்போதுள்ள தி.மு.க. அரசும், முதல்வர் ஸ்டாலினும் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை பொறுத்துதான், என்னுடைய வாழ்வும் சாவும் அடங்கியிருக்கிறது.

இப்படிப்பட்ட தலைவர் ஒருவர், நாம் தமிழர் என்றொரு கட்சியை நடத்திவருகிறார் என்று நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

எனவே, சீமானை கைது செய்ய வேண்டும் என்று மனுவில் கேட்டிருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## நடிகை விந்தியா குறித்து அவதூறு: நீதிமன்றம் உத்தரவு



அ.தி.மு.க. கொள்கைப்பரப்பு துணைச் செயலாளரான நடிகை விந்தியா குறித்து அவதூறாக பேசி காணொளி வெளியிட்டதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில், தி.மு.க. நிர்வாகியின் முன்பிணை மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடிகை விந்தியா குறித்து அவதூறாக பேசி தி.மு.க. நிர்வாகி குடியாத்தம் குமரன் என்பவர் காணொளி வெளியிட்டார். இது தொடர்பாக தேசிய மகளிர் ஆணையத்தில் அ.தி.மு.க. வழக்கறிஞர் இன்பதுரை புகார் அளித்தார். இதைத் தொடர்ந்து குமரன் மீது சென்னை மாநகர சைபர் குற்ற தடுப்பு பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் தனக்கு முன்பிணை வழங்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் குமரன் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில், விந்தியா குறித்து தாம் தவறாக எதுவும் பேசவில்லை. தன் மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி டீக்காரமன் முன்பு விசாரணைக்கு வந்தது. இதன்போது குமரனுக்கு முன்பிணை வழங்கக் கூடாது என விந்தியா சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதை யடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, குமரனின் முன் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# பிரான்ஸில் அரச பாடசாலைகளில் மாணவிகள் அபாயா அணிய தடை!



பிரான்ஸ் அரசினால் நடத்திச் செல்லப்படும் பாடசாலைகளில் மாணவிகள் அபாயா அணிவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என அந்த நாட்டு கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய கல்வி ஆண்டு எதிர்வரும் செப்டம்பர் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த சட்டம் மிக விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

அரச பாடசாலைகளில் மற்றும் அரசாங்க கட்டடங்களில் மத அடையாளங்களுக்கு பிரான்ஸ் கடுமையான தடைகளை விதித்துள்ளது.

அவை மதசார்பற்ற சட்டங்களை மீறுகிறது என அந்த நாட்டு அரசாங்கம் வாதிட்டுள்ளது.

பல மாதங்களாக நடைபெற்று வந்த வாதப்பிரதிவாதங்களை அடுத்தே அபாயாவைத் தடை செய்யும் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## புதிய வகை கொரோனா வைரஸ் அமெரிக்காவில் இனம் காணப்பட்டது!



புதிய வகையானதும் வீரியம் கூடியதுமான கொரோனா வைரஸ் இனம் காணப்பட்டதையடுத்து, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மேலதிக நிதியினை காங்கிரஸ் சபையிடம் இருந்து கோர திட்டமிட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மேலதிக நிதி உதவியுடன் புதிய கொரோனா வைரஸ் திரிபுக்கான தடுப்பூசிகள் குறித்து உடனடி ஆராய்ச்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஈடுபடுவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கொவிட் – 19 தொற்றுக்கான எஸ்.பி.பி. 1.5 என அழைக்கப்படும் ஊசி மருந்தினை மேலும் வீரியம் கூடிய தன்மையை கொண்டதாக உற்பத்தி செய்ய விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

அமெரிக்க மருத்துவ விஞ்ஞானிகளின் திட்டத்திற்கு அமைய அடுத்த மாதமளவில் கொவிட் – 19 இற்கான புதிய தடுப்பூசிகளை மக்கள் பெறக்கூடியதாக இருக்கும் என 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' தெரிவித்துள்ளது.

இதற்கான அனுமதி அமெரிக்க நோய் தடுப்பு அமைப்பின் பரிந்துரைக் கமைய மேற்கொள்ளப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, வெள்ளை மாளிகை 40 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி கோரிக்கை ஒன்றினை சமர்ப்பித்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 9.25 பில்லியன் அமெரிக்க டொலர்கள் புதிய வகை கொவிட் 19 நோய் எதிர்ப்பிற்காக செலவிடப்படும் என நம்பப்படுகின்றது.

அதேவேளை, அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என மருத்துவ தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## பாகிஸ்தானில் இடம்பெற்ற வீதி விபத்தில் 7 பேர் பலி!

வடமேற்கு பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா மாகாணத்தின் இடம்பெற்ற வீதி விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடமேற்கு பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா மாகாணம் மன்சேராவில் சிற்றூர்ந்து ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பெண் ஒருவர் உட்பட 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், இதில் 11 பேர் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிற்றூர்ந்தின் சாரதிக்கு வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனமையே விபத்துக்கான காரணம் என அந்த நாட்டு காவல்துறையினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

## பிரித்தானிய விமான சேவையில் பாதிப்பு

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பிரித்தானியா விமான சேவையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அந்த நாட்டின் தேசிய விமான சேவை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், நாட்டின் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பில் தொழில்நுட்பச் சிக்கல் எழுந்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் காரணமாக விமானங்கள் தாமதமாக வரலாம் என பிரித்தானியாவின் விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பிரித்தானியாவின் தேசிய விமான சேவை தெரிவிக்கையில், எதிர்கொள்ளும் தொழில்நுட்ப கோளாறு காரணமாக, விமானங்களுக்கு சில பாதுகாப்பு நடவடிக்கைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன, இதனால் விமானங்கள் தாமதமாகலாம் என வலியுறுத்தியுள்ளது.

# விளையாட்டுக் கழகத்துக்குச் சீருடை







(றியாஸ் ஆதம்)

அட்டாளைச்சேனை அல் – ஆரியன் விளையாட்டுக் கழகத்தின் புதிய சீருடை அறிமுக நிகழ்வு சனிக்கிழமை (26) அட்டாளைச்சேனை – 06 பல்தேவைக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இதன்போது அல் – ஆரியன் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.எம்.இர்ஷான் புதிய சீருடையைக் கழக வீரர்களுக்கு வழங்கினார். கழகத்தின் செயலாளர் ஆசிரியர் டபள்யூ.எம்.நிஸ்ரி, பொருளாளர் எம்.ஐ.எம்.மசூர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அம்பாறை உள்ளூராட்சி பெண்கள் சந்திப்பு





(கே. எ. ஹமீட்)

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்ற 'வில் கிளப்' மற்றும் பலத்தரப்பட்ட பங்குதாரர்களுக்கு இடையிலான சந்திப்பு 26ஆம் திகதி சனிக்கிழமை அம்பாறையிலுள்ள தனியார் விடுதியொன்றில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற பெண்கள் எழுதிய திட்ட முன்மொழிவுகளின் இறுதி வடிவம், பலத்தரப்பட்ட பங்கு தாரர்கள் குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றுக்கான சிறு மானிய உதவிகள் வழங்குவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

கல்முனை, திருக்கோவில், ஆலையடிவேம்பு, சம்மாந்துறை மற்றும் அம்பாறை ஆகிய 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கப்பெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளர் கமல் நெத்மினி, அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் உயர் அதிகாரிகள், சேர்ச் ஃபொர் கொமன் கிரவுன்ட் நிறுவனத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக்கான சிரேஷ்ட திட்ட முகாமையாளர் எம்.ஐ. முகம்மட் சதாத், இணைப்பாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பெண் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# பாலர் பாடசாலை மாணவர்களின் சுகாதாரம் தொடர்பில் கலந்தாய்வு

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனையின் கீழ் கல்முனை பிராந்தியத்தில் உள்ள பாலர் பாடசாலை மட்டங்களில் சுகாதார மேம்பாட்டை விஸ்தரிப்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சனிக்கிழமை (26) இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார, கல்வி உத்தியோகத்தர் எம்.ஜே. எம்.பைரூஸினால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த நிகழ்வில் வளவாளர்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தாய் சேய் நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எச்.ரிஸ்பின், பொது சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி, பிராந்திய வாய்ச் சுகாதார நிபுணர் டாக்டர் எம்.எச்.கே.சரூக் ஆகியோர் கலந்துகொண்டனர்.



பாலர் பாடசாலைகளில் போசனை மட்டத்தை அதிகரிப்பது, வாய் சுகாதாரத்தை மேம்படுத்திச் சிறுவர்களின் வாய் சுகாதாரத்தை பாதுகாப்பது, சிறார்களின் பொது சுகாதாரம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இந்த நிகழ்வின் போது கலந்துரையாடப்பட்டது.





# பல்துறை சார்ந்த பெண்களுக்கு கௌரவம்!

(அபு அலா)

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பல்துறை சார்ந்த 160 பெண்களைப் பாராட்டி கௌரவிக்கும் விழா ஹலோ ரி.வி. ஹலோ எவ். எம். நிறுவனத்தின் ஏற்பாட்டில் 23 ஆம்திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி எப்.எம்.சரிக் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ.திசாநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சமூகசேவை, கல்வி, மருத்துவம், விளையாட்டு, சுற்றுலாத்துறை, அழகியல்துறை, கலை, கலாசாரம், அரச மற்றும் அரச சார்பற்ற தொழிற்துறை சார்ந்த பல்வேறுபட்ட பெண்கள் இந்த விழாவின்போது பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.



# தமிழ் மக்களுடைய பிரச்சினை தொடர்பில் அரசுடன் பேசுவோம்

## மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் என்று சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு




(த.சுபேசன்)

தமிழ் மக்களுடைய பிரச்சனைகள் தொடர்பாக அரசுடன் பேசுவதென புளொட் அமைப்பின் மத்திய குழுக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படடுள்ளது என்று புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை (26) சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) மத்திய குழுக்கூட்டம் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தலைமையில் இடம்பெற்றது. பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை இடம்பெற்ற மேற்படி மத்திய குழுக் கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நா.இரட்ணலிங்கம், பொருளாளரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சருமான க.சிவனேசன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் ஜி.ரி.லிங்கநாதன், கரைத்துரைப்பற்று பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் கே.தவராசா உள்ளிட்ட மத்திய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் சமகால அரசியல் விடயங்கள், குருந்தூர் மலை விவகாரம், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்–

கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் சமகால அரசியல் நிலைமைகள், தமிழ் மக்கள் தொடர்ச்சியாக முகம் கொடுத்து வருகின்ற பிரச்சினைகள், ஆக்கிரமிப்பு நிலைமைகள் சம்பந்தமாக கலந்தாலோசிக்கப்பட்டது.

இவ்வாறான மக்கள் அனுபவிக்கும் பிரச்சனைகளுக்கு கட்சியால் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் தீர்மானித்துள்ளோம்.

அரசியல் ரீதியாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வளர்ப்பது மாத்திரமல்லாமல் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை அரசுடன் பேசி உரிய தீர்வைப் பெறுவது தொடர்பிலும் எமது மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் அண்மையில் வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்திருந்தோம். குறிப்பாக அமெரிக்க தூதுவரை சந்தித்து பேசினோம். எவ்வளவு தூரம் அமெரிக்கா எமக்கு உதவ முடியும் என்பது தொடர்பாகவும் அவரிடம் கேட்டறிந்தோம். அதன்போது தமக்கு ஓர் எல்லை இருப்பதாகவும் அந்த எல்லைக்குள் தான் தாம் செயற்பட முடியும் எனவும் எம்மிடம் கூறியிருந்தார்.

இது தொடர்பாகவும் எமது மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடியிருந்தோம்.– என்றார்.

# 35 வருடங்களாக பல்கலை. மாணவர்களுக்கு உதவி வழங்கி வரும் ராமகிருஷ்ண மிஷன்

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த 35 வருடங்களாக பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கு உயர் கல்விக்கான உதவித்தொகைகளை ராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு கிளை மாதந் தோறும் வழங்கி வருகிறது.

அந்த வகையில் இந்த வருடத்தில் புதிதாக பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கிடைக்க பெற்று பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கான உதவித் தொகைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (26) கல்லடி சிறுவர் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

ராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அகஷராத்மானந்தஜீ மஹராஜ் தலைமையில்



நடைபெற்ற நிகழ்வில் உதவு தொகை வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷன் கல்லடி சிறுவர் ஆச்சிரமத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

ஒவ்வொரு மாதத்துக்கான கொடுப்பனவுகளும் மூன்று மாதத்துக்கு ஒருமுறை அவர்களுடைய வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்படுகின்றன.

குறிப்பிட்ட மாணவர்கள் சிறந்த முறையில் அவர்களுடைய மேற்படிப்பை பூர்த்தி செய்யும் வரையிலும் அவர்களுக்கான உதவித் தொகைகள் மாதம் தோறும் வழங்கப்படுகின்றன. அத்தோடு சிறந்த முறையில் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு பட்ட மேற்படிப்புக்கான உதவிகளும் வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.08.2023




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். நீங்கள் எதிர்கொள்ளவிருக்கும் சவால்களை சமாளிப்பதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும்.

பணியிடத்தில் நற்பெயர் எடுப்பது சாத்தியமாகும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது.




யதார்த்தமான தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. பயணங்கள் காணப்படுகின்றது. இசை விழாக்களில் கலந்து கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனம் தேவை. திட்டமிட்டு பணியாற்றினால் உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற முடியும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் எழ வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் பேசுவதற்கு முன் நன்றாக யோசித்து உரையாடவும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று கால் வலி பாதிப்பு ஏற்படலாம். உடற் பயிற்சி செய்வதன் மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கலாம்.




இன்று உங்கள் இலக்குகளை அடைய சிறப்பாக திட்டமிட வேண்டும். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பது உகந்ததல்ல.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகள் காணப்படும்.உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் சற்று விலகி இருப்பது நல்லது. உங்கள் துணையுடன் தொடர்பு கொள்ளும் போது கவனம் தேவை.

வீட்டின் பராமரிப்பு அல்லது புனரமைப்பிற்காக செலவு செய்ய வேண்டிய அவசியம் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு அனுகூலமணா நாள். நீங்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறும்.

பணியிடத்தில் வெற்றிக்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளது. உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்கள் நண்பர் இல்லத் திருமணத்தில் பங்கு கொண்டு நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். நீங்கள் சேமிப்பையும் சிறந்த முறையில் பராமரிக்க இயலும்.

பொதுவாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் முயற்சியின் மூலம் வெற்றி காண்பீர்கள். எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ள இயலும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் நிதித் தேவைகளை பாதுகாப்புடன் பூர்த்தி செய்துகொள்வதற்கான வாய்ப்பு உள்ளது. கடன் வகையில் பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் மிகவும் சிறப்பாக இருக்கும்.




இன்று வளமான நாளாக இருக்காது. ஏற்ற இறக்கங்கள் காணப்படும். பதட்டமின்றி மனதை அமைதியாக வைத்துக் கொள்வதன் மூலம் நீங்கள் சிறப்பாக சிந்திக்கலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் பொறுப்புகளை கையாண்டு பணிகளை முடிப்பீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இத்தகைய உணர்வை இன்று நீங்கள் தவிர்த்தல் நல்லது.

பண வரவு செலவு இரண்டும் காணப்படும். உங்கள் பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.

உங்கள் குழந்தைகளின் உடல் நலத்திற்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.




நீங்கள் இன்றைய நாளை சிறப்பாக திட்டமிட உங்கள் மனதை செலுத்த வேண்டும். சில சமயங்களில் நீங்கள் பொறுமை இழப்பீர்கள். அமைதியாக இருப்பது நல்லது.

இன்று பணிகளை முடிப்பதை சிறிது கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் உறவில் குழப்பமான உணர்வுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் அமைதியைப் பெற்று மகிழ இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று வளமான நிதிநிளைமைக்கு சாதகமான நாள் அல்ல. தேவையற்ற செலவுகளும் இன்று செய்ய வேண்டியிருக்கும்.

உங்கள தாயின் உடல் நலத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.




குறைந்த முயற்சியிலேயே வெற்றிகள் கைகூடும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உங்கள் திறமைகளை வெளியுலகிற்கு நிரூபித்துக் காட்டுவீர்கள்.

பணியைப் பொறுத்தவரை உங்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் திறமைக்கு மெருகூட்ட நீங்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பான அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இது உங்கள் துணையை மிகவும் மகிழ்விக்கும்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். இன்று உங்களால் பணத்தை சேமிக்கவும் முதலீடு செய்யவும் இயலும். இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.08.2023




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. உங்கள் புத்திசாலித்த னத்தை பயன்படுத்தி இன்றைய பணி களை மேற்கொள்ள வேண்டும். எந்த செயலையும் செய்வதற்கு முன் இரண்டு முறை யோசிக்கவும். உங்கள் வார்த்தை களில் கவனம் தேவை.

உங்கள் பணியில் மாறுதலுக்கான வாய்ப்பு உள்ளது. பணி தொடர்பான பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். உங்கள் பொறுப்புகளை கவன மாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாகப் பேசவும். சிறிய விஷயங்கள் பெரிய சர்ச்சைகளை ஏற்படுத்தும்.

பணப்புழக்கத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். உங்கள் பணத்தை சாதுர்யமாக கையாள்வதை கடின மாக உணர்வீர்கள்.




உங்கள் பணிகளை எளிதாக மேற் கொள்வது கடினமாக இருக்கும். இன்று வெற்றி காண திட்டமிடவேண்டியது அவசியம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். நீங்கள் திறமையாக பணியாற்ற நேர்மறை அணுகு முறையை பராமரிக்கவும்.

சூடான வாக்கு வாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக இருந்து விஷயங்களை பக்குவமாக கையாள்வது சிறந்தது.

நிதி வளர்ச்சி எதிர்பார்த்த அளவில் காணப்படாது. பணம் இழப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்கள் தொடை அல்லது இடுப்பில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இல்லாத காரணத்தால் நீங்கள் உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் சக பணியாளர்கள் சில பிரச்சினைகளை ஏற்படுத்துவார்கள். அமைதியைப் பராமரிக்க அனுசரித்து செல்வது சிறந்தது.

உங்கள் எண்ணங்களை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவதில் தயக்க இருக்கும். மகிழ்ச்சியை பராமரிக்க மனம் திறந்து பேசுவது அவசியம்.

நிதிநிலையில் வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் சிறிது அசௌகரியமாக உணர் வீர்கள். ஓய்வெடுக்க நேரம் எடுத்துக் கொள்ளுங் கள்.




இன்று நீங்கள் அமைதியான மன நிலையில் இருப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

இன்று அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரி களால் பாராட்டப்படும்.

உங்கள உறவில் அன்பும் காதலும் நிறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

நிதி நிலைமையில் வளர்ச்சி சிறப்பாக காணப்படும். உங்கள் பணத்தை புத்திசாலித்தனமாகக் கையாள்வீர் கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS

KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park